

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மரக்காணத்தில் பேரிடர் மேலாண்மை கட்டிடத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க,பொன்முடி, பேரிடர் மேலாண்மை அதிகாரிகளுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்தார். மாவட்ட ஆட்சியர் சி. பழனி, மாவட்ட எஸ்பி, தீபக்சுவாட்ச், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா .இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் , கழக தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் – சி.அமுதா ஆகியோரின் மகள் டாக்டர் ருதிகாஸ்ரீ – சி.வி.அவினாஷ் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் 12வது மண்டலக் குழுத்தலைவர் என்.சந்திரன், வட்டகழக செயலாளர் ஜெ.நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! எம்.சண்முகசுந்தரம் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் 'மனிதநேய உதயநாள்'!

## 2000 பேருக்கு நல உதவிகள் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்!

சென்னை, டிச.02-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு - குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 நபர்களுக்கு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்9, பேதமற்ற குடியிருப்பு! சமத்துவத்தின் உயிர்துடிப்பு! எனும் தலைப்பில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 03.12.2024 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, டான் போஸ்கோ பள்ளி வளாகம் பிராட்வேயில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்டவிழாவில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.சண்முகசுந்தரம் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட். ஆசாத் எம்.சி, என்.பி.எம்.சேக் அப்துல்லா, டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், சி.மகேஷ்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எஸ்.அசாரூதீன், வி.எல்.யஷ்வந்த், அ.திருப்பதி. நா.மோகன், அ.ஆனந்த் கே.சூர்யபிரகாஷ், அ.சுமன்ராஜ், பி.செந்தில்குமார், க.பாலாஜி, எஸ்.இம்ரான்கான், டி.பிலிப்ஸ், பி.விஷ்ணுச க்கரவர்த்தி, மே.ஜனார்த்னன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், மந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயரான், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி..கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், க.கவியரசு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில், குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 நபர்களுக்கு -குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் - நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், நலத்திட்டவிழாவில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம் கவி, எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் , மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பரிதிஇளம்சுருதி எம்.சி, கே.சந்துரு, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எஸ்.மணிமுடி, சங்கரி நாராயணன், மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி. மண்டலகுழுத்தலைவர்கள்: பி.கே.மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி. பகுதி செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி. ராஜகோபால்.

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், பி.உதயகுமார், சாவித்திரிவீரராகவன், அ.நிர்மலாதேவி. மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், நா.துலுக்கானம், எல்.பி.எப்.மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, துரைகண்ணன், எம்.பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமர்த்தி கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக். துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ்ஜெயின் எம்.சி, வே.பரிமளம் எம்.சி, எல்.நவின் எம்.சி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### மழை வெள்ளம்: திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில்

# அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு!

## பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

திருவள்ளூர், டிச. 02

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் , திருப்பாலைவனம் வைர குப்பம் லைட் ஹவுஸ் குப்பம் ஃபெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று பார்வையிட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில், முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக்கிணங்க மாவட்ட நிர்வாகம் ஃபெஞ்சல் புயலே யொட்டி கடலோர பகுதி அதாவது தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்களை மீட்டு பத்திரமாக புயல் பாதிப்பு முகாமில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு குழந்தைகளுக்கு தேவையான பால், பிரட் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறோம்.

போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகிறோம் தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்பதற்காக மூன்று வாகனங்கள் சென்றுள்ளது பத்திரமாக அவர்களை மீட்டு புயல் பாதுகாப்பு முகாமில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன மாலை 6 மணிக்குள் 500 குடும்பங்களை சேர்ந்த பொதுமக்களை பத்திரமாக மீட்டு முகாமில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் தயார் நிலையில் உள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜே. கோவிந்தராஜன் , துரை சந்திரசேகர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி வேணு, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் .ரவி, பொன்னேரி வட்டாட்சியர் மதிவாணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த தொடர் மழையினால் தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த கோட்டப்பட்டி சிலம்பை பகுதியில் தரைப்பாலத்தை கடந்து சென்ற மழைநீரை சுற்றுலா துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு,பாதுகாப்பு, முன்எச்சரிக்கை பணிகள்,மற்றும் தயாராக உள்ள நிவாரண பொருட்கள் குறித்து களஆய்வு மேற்கொண்டார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திவ்யதர்ஷினி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன்,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,ஆதி திராவிடர் நலக்குழு உறுப்பினர்,ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.


